முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1445

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.09.2023,** புதன்கிழமை

1. பிரணவக்குடில் படைத்த ஐயனே
பிரணவ சக்திமிகு ராஜனே
சரவணச்சுடரேற்றும் அரங்கனே
சற்குருவாய் திகழுகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 27 ம் நாள், 13.09.2023, புதன்கிழமை)
வரமாக என்சக்தி உன்னுள்ளே
வாழ்வாங்கு வாழ்ந்து உலகோர்க்கு
3. உலகோர்க்கு வரம்பல தந்துவர
உயர்வாக உன் சேவை உலகத்தை மாற்றும்
தயவாக நிறைந்த மகா சக்தியாய் இருக்க
தரணியோர் உன் தொடர்பு கூட்டி இனிதே நாளும்
4. நாளும் நாளும் உன் ஜெபதபம் கூறி
நம்பிக்கைபட உலகோர் சன்மார்க்க வழியைத் தொடர
தொடரவே உலகினில் அரங்கன் உன் ஆசியாலே
உயர்வான மாற்றம் ஞானயுக மாற்றமாக
5. தயவான ஆறுமுகன் என் ஆசியோடு
தரணிகண்டு உலகில் அற்புதம் நிகழக்கூடும்
கூடவே மகா சக்தி நிறைந்த
குருவும் ஆறுமுகன் என் அவதாரமும் நீ
6. நிறைவாக உன் தொடர்பு கூட்டி
நிலவுலகோர் நீதிநெறிபிறழா வண்ணம்
வண்ணமுடன் தொடர்ந்து உன் சீடர்களென
வையகத்தில் அடையாளம் கொண்டு தொண்டாற்றி

7. தடையற தர்மத்தில் இருந்தால் போதும்
தானவர்களும் உன்னால் இந்த கலியினில் ஞானிகளாவர்
ஆகவே அரங்கன் தொடர்பு அகிலத்தையே மாற்றும்
வகையான அரங்கன் தர்மமே வையகத்தையே காக்கும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—